## மாதவரம் — தரமணி மெட்ரோ ரெயில்:

# ஜூன் மாதம் பணிகள் தொடங்கும்!

## தாமதம் ஏற்படுவதை தவிர்க்க புதிய ஏற்பாடு!!

சென்னை, ஜன. 07–

சென்னை மெட்ரோ 2–வது திட்டத்திற்கான பணிகள் ஜூன் மாதம் தொடங்கும் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மாதவரம் – தரமணி இடையே இந்த பாதை அமைக்கப்படுகிறது. இந்த பணிகளில் காலதாமதத்தை தவிர்க்க ரெயில்வே சுரங்கப் பாதையை அமைக்க விடப்படும் டெண்டர்கள் ஒரே காண்டிரக்டருக்கு விடப்பட மாட்டாது. மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணி ஒரு காண்டிரக்டருக்கும், சுரங்கப்பாதை அமைக்கும் இன்னொரு காண்டிரக்டருக்கும் விடப்படும். அப்போது தான் இந்த பணிகள் தாமதமாவது தவிர்க்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை சென்ட்ரல் – விமானநிலையம் இடையே மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக தொடங்கப்பட்டுள்ள இந்த போக்குவரத்து வண்ணாரப்பேட்டை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்ட்ரலில் இருந்து இரு மார்க்கமாக விமான நிலையத்திற்கு தற்போது மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

இரண்டாவது திட்டப்பணி

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணி விரைவில் தொடங்க இருக்கிறது. இதற்கான பணி ஜூன் மாதம் தொடங்கும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாதவரத்தில் இருந்து தரமணி வரை இந்த மெட்ரோ ரெயில் மார்க்கம் அமைக்கப்படுகிறது.

பூமியை குடைந்தெடுப்பதற்கான ராட்சத எந்திரங்கள் விரைவில் வரவழைக்கப்பட உள்ளன. முதலில் மாதவரம் வேணுகோபால் நகரில் இருந்து கெல்லீஸ் வரை 9 கி.மீட்டர் தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. பிறகு கெல்லீஸில் இருந்து தரமணி சாலை சந்திப்பு வரை இரண்டாவது சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

டெண்டர்

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகள் கூறியிருப்பதாவது:–

மெட்ரோ ரெயில் இரண்டாவது திட்டத்திற்கான டெண்டர்கள் குறித்து இன்னும் 2 மாதத்தில் முடிவு செய்யப்படும். ஆரம்பக் கட்ட வேலைகள் முடிந்தவுடன் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நகரின் பல்வேறு இடங்களில் தொடங்கப்படும். இந்த இரண்டாவது திட்டம் மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளுக்கு ஜப்பான் சர்வ தேச கூட்டுறவு ஏஜென்சி கடனுதவி வழங்குகிறது. மொத்தம் 52 கி. மீட்டருக்கான மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்படுவதற்கான கடனுதவி தற்போது இரண்டாவது கட்டமாக 12 கி.மீட்டர் தொலைவுக்கான செலவுகளும் அடங்கும்.

டெண்டர் விடப்படுவதற்கு முன்பாக அதனை எடுக்கும் ஏஜென்சிகளுக்கு ஒப்புதல் வழங்கப்படும். இந்த ஆண்டு மத்திய வாக்கில் பணிகள் ஆரம்பமாகும். எந்த அளவுக்கு விரைவாக இந்த பணிகளை முடிக்க முடியுமோ அந்த அளவுக்கு மிக விரைவாக பணிகள் முடிக்கப்படும். இந்த பாதையில் போவதற்கு ஒரு பாதையும், வருவதற்கு ஒரு பாதையுமாக இரு சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும். இந்த பணி ஒரே நேரத்தில் நடைபெறும். வேணுகோபால் நகர்–கெல்லீஸ், கெல்லீஸ் மற்றும் தரமணி இடையே ஒரே நேரத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி தொடங்கும்.

மண் வளம்

நாளொன்றுக்கு சுரங்கப்பாதை தோண்டும் பணி 6 முதல் 10 மீட்டர் வரை நடைபெறும். மண்ணின் தரத்தை பொறுத்து இந்த பணி மேற்கொள்ளப்படும். சுரங்கப்பாதை அமைக்கும் போது கட்டிடங்களுக்கு எந்தவொரு சேதாரமும் ஏற்படாது. ஒவ்வொரு 25 மீட்டர் தொலைவுக்கும் மண் பரிசோதனை செய்யப்பட்ட பிறகு தான் சுரங்கப்பாதை தோண்டப்படும்.

இன்னும் சில வாரங்களில் டெண்டர் கோரப்படும். மெட்ரோ ரெயில் நிலையம் மற்றும் 21 கி.மீட்டர் தொலைவிலான சுரங்கப்பணி ஆகியவற்றிற்கு இந்த டெண்டர் கோரப்படுகிறது. சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் ஈடுபடும் காண்டிராக்டருக்கு, மெட்ரோ ரெயில் நிலையம் அமைப்பதற்கான காண்டிராக்ட் ஒப்பந்தங்கள் தரப்பட மாட்டாது. இதே போல் மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணியில் ஈடுபடும் காண்டிராக்டருக்கு சுரங்கப்பாதை அமைப்பதற்கான காண்டிராக்ட் தரப்பட மாட்டாது.

மின்னல் வேகத்தில் பணி ஒரே காண்டிராக்டருக்கு இரு பணிகளையும் ஒப்படைத்தால் இந்த திட்டப் பணியில் தாமதம் ஏற்படும். அதை தவிர்ப்பதற்காகவே இரு ஒப்பந்ததாரர்களும் தனித்தனியாக இந்த பணிகள் ஒப்படைக்கப்பட உள்ளன.

இவ்வாறு மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.